# சுவிட்சர்லாந்தின் அரசியல் முறைமை

*ஏ. சர்ஜுன், உதவி விரிவுரையாளர்,*
*அரசியல் விஞ்ஞானப் பிரிவு, சமூக விஞ்ஞானத்துறை,*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.*

(சுவிர்சர்லாந்தானது அரசியல் உலகில் ஒரு விசித்திரமான நாடு. பலமான சமஷ்டி (கூட்டு) ஆட்சி முறையையும் விசித்திரமான நிர்வாக முறையையும் கொண்டு இன, மொழி, மத, கலாசார மற்றும் புவியியல் ரீதியாக பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டுள்ள மக்கள் மத்தியில் சிறிதும் முரண்பாடுகளின்றி சிறந்த முறையில் தனது அரசியல் பயணத்தை கட்டியெழுப்பி வந்திருக்கிறது. அதன் அரசியல் முறையில் உலகிற்கு பல முன்மாதிரிகள் உள்ளன. விசேடமாக முரண்பாடுகள் நிறைந்த சமூகங்களுக்கு வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு குறிப்பிடத்தக்க ஏற்பாடுகளால் முன்மாதிரிகளை வழங்குகிறது. அவற்றை முடியுமானவரையில் தெளிவுபடுத்தும் வகையில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது).

## அறிமுகம்:

41,293 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட சுவிட்சர்லாந்தானது மேற்கு ஐரோப்பாவின் மத்தியில் பிரான்ஸ், இத்தாலி, ஒஸ்ரியா ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டின் கணிப்பீட்டின்படி 72.60 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்தது.[01] இவர்களிடையே இன, மொழி, மத ரீதியாக பல பிரிவுகள் காணப்படுவதோடு புவியியல் ரீதியாகவும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவர்கள் ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலியன், ஒஸ்ரியன் ஆகிய நான்கு இனங்களின் பூர்வீகத்தைக் கொண்டவர்கள். இவர்களில் $^{2}/_{3}$ பகுதியினர் ஜேர்மன் மொழியையும் $^{1}/_{5}$ பகுதியினர் பிரான்ஸ் மொழியையும் $^{1}/_{10}$ பகுதியினர் இத்தாலிய மொழியையும் மீதமானோர் ரொமன்ஜ் (Romanche) எனும் திசை மொழியையும்

பேசுகின்றனர். (இம்மொழி வேறுபாடுகளை கூட்டாட்சி அரசியல் சட்டம் ஏற்றுக்கொள்கிறது). மத ரீதியாக இவர்களை நோக்கின் 46% ஆனோர் புரட்டஸ்தாந்தையும், 48% ஆனோர் ரோமன் கத்தோலிக்கத்தையும் பின்பற்றுகின்றனர். அவ்வாறே சுமார் 10,000 மக்கள் யூத மதத்தை பின்பற்றுவதோடு சிறியளவிலான முஸ்லிம்களும் வாழ்கின்றனர். தவிர சுமார் அரை லெட்சம் மக்கள் எந்த மதத்தையும் பின்பற்றாமலும் வாழ்கின்றனர்.[02]

அவ்வாறே 12 மானிலங்களில் (குறுநிலம் அல்லது கோட்டம்) புரட்டஸ்தாந்தவர்கள் பெரும்பான்மையாகவும் 10 மானிலங்களில் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாகவும் உள்ளனர். தவிர புரட்டஸ்தாந்தவர்கள் பெரும்பான்மையாகவுள்ள 12 மானிலங்களில் 9இல் ஜேர்மன் மொழி பேசுவோரும் 3இல் பிரான்ஸ் மொழி பேசுவோரும் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாக வாழும் 10 மானிலங்களில் 7இல் ஜேர்மன் மொழி பேசுவோரும் இரண்டில் பிரான்ஸ் மொழி பேசுவோரும் ஒன்றில் இத்தாலி மொழி பேசுவோரும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இவ்வாறு இன, மொழி, மத ரீதியாக பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டவர்களாக சுவிஸ் மக்கள் இருந்தபோதும் அவர்களிடையே பலமான தேசிய ஐக்கியமும் தேசிய ஒருமைப்பாடும் மிகைத்துக் காணப்படுகின்றது.

## கைத்தொழிலும் உற்பத்தியும் :

சுவிஸ் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ¾ பகுதி விவசாயத்திற்கு பொருத்தமற்ற மலைப்பிரதேசமாகவும் (பெரும்பான்மையாக அல்ப்ஸ் (Alps) மலைப்பிரதேசம்) சுமார் 30% ஆன பகுதி வனாந்தரமாகவும் உள்ளது. இதனால் மிகவும் சொற்ப அளவு (22%) நிலமே விவசாயத்திற்குப் பொருத்தமானதாகவுள்ளதால் சுவிட்சர்லாந்து தன் உணவுத் தேவைக்கு அதிகம் இறக்குமதியையே நம்பியுள்ளது. தவிர மிகவும் குறைந்தளவிலேயே கனிய வளங்களைக் கொண்டுள்ளதனாலும் தன் இருப்பை ஏற்றுமதி இறக்குமதி

வர்த்தகத்திலேயே தக்கவைத்துள்ளது. இதனால் சுவிஸ் மக்கள் பல்வேறுபட்ட வேற்றுமையிலும் வளப்பற்றாக்குறையிலும் தம் பலமான ஒற்றுமையினால் தமது கைத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இன்று உலகின் முன்னணி கைத்தொழில்மய நாடாக தமது நாட்டை உயர்த்தியுள்ளார்கள். (சுவிஸ் இன்று ஐரோப்பாவின் மூன்றாவது அதிகூடிய கைத்தொழில்மய நாடாகவும் உலகில் ஆகக்கூடிய தலா வருமானம் பெறும் நாடாகவும் திகழ்கிறது).

## அரசியல் நடுநிலைமை :

உலக அரசியலில் நடுநிலைமை வகிப்பது சுவிட்சாலாந்து அரசியலில் கவனத்தை ஈர்க்கத்தக்க ஒரு பண்பு ஆகும். சுமார் 4 நூற்றாண்டுகளாக நடுநிலைமைக் கொள்கையை கடைப்படித்து வருகின்றது. 17ஆம் நூற்றாண்டின் மதங்களுக்கிடையிலான போரின்போதும் 20ஆம் நூற்றாண்டின் இரு உலக மகா யுத்தங்களின்போதும் எந்த அணியையும் சாராது கடுமையான நடுநிலைமைக் கொள்கையை பின்பற்றி வந்துள்ளது. மிக அண்மையில் இந்நாட்டு மக்கள் அங்கீகரிக்கும் வரை அதிகார அரசியலில் இருந்து ஒதுங்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையில் (U.N.O) கூட அங்கத்துவம் பெறாது வந்திருக்கிறது. இதன் அரசியல் நடுநிலைமை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. 1815இல் வியன்னா காங்கிரஸும், 1920இல் நேச அணியும் இதனை அங்கீகரித்தது. புவியியல் ரீதியாக பலம் பெற்றுள்ள பெரிய இராணுவ அதிகார நாடுகளால் சூழப்பட்டுள்ள போதிலும் பொருளாதார ரீதியாக ஏற்றுமதி இறக்குமதிக்கு உலக நாடுகள் அனைத்திலுமே தங்கியிருந்த போதிலும் மரபு ரீதியாக அவர்கள் பின்பற்றிவரும் நடுநிலைமைக் கொள்கை அவர்களை உள்நாட்டிலும் உலக மட்டத்திலும் ஒளிமயமாக்கியுள்ளது என அவர்கள் பலமாக நம்புகின்றனர்.

## அரசியலமைப்பு வரலாறு :

1291இல் யூரி (Uri), செவைஸ் (Schwyz) மற்றும் அன்டர்வோல்டன் (Unterwalden) ஆகிய மூன்று குறு நிலங்களும் (Cantons) எதிரிகளின் படையெடுப்புக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நிலையான கூட்டு (Perpectual Leaque) ஒன்றை உருவாக்கிக் கொண்டதிலிருந்து சுவிட்சர்லாந்தின் கூட்டமைப்பு (Swiss confederation) ஆரம்பமாகின்றது எனலாம். காலப்போக்கில் இந்த கூட்டமைப்பில் 1573இல் 13 குறுநிலங்கள் இணைந்து கொண்டன. ஐரோப்பிய வரலாற்றில் 30 வருட நடந்த நீண்ட போருக்குப் பின் 1648இல் ஏற்பட்ட வெஸ்ட்பேலியா உடன்படிக்கை (Treaty of Westphallia) பல குறுநிலங்கள் சேர்ந்த சுவிஸ் கூட்டமைப்பை முதன் முதலில் ஒரு சுதந்திர அரசாக அங்கீகரித்தது.[03] ஆனாலும் உள்வாரியாக குறுநிலங்கள் கூடிக் குறைந்த அதிகாரங்களைக் கொண்டிருந்தன. சில பொதுவான நலன்கள் குறித்தே அவைகளிடையே ஒற்றுமை காணப்பட்டது. கூட்டமைப்பின் ஓர் அங்கமாக Diet எனும் காங்கிரஸ் (பாராளுமன்றம்) காணப்பட்டது. ஆனாலும் Diet தனது முடிவுகளை குறு நிலங்களுக்கு திணிக்கும் அதிகாரத்தை பெற்றிருக்கவில்லை.

இருந்தபோதிலும் பிரான்ஸியப் புரட்சியானது சுவிஸ் கூட்டாட்சியை தடைப்படுத்தலாயிற்று. பிரான்ஸியப் படைகள் படிப்படியாக சுவிட்சர்லாந்தின் முழுப் பகுதியையும் ஆக்கிரமித்து தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததோடு ஹெல்வெடிக் குடியரசு (Helvetic Republic) எனும் அரசியல் திட்டத்தின் கீழ் ஒற்றையாட்சி அரசாங்கத்தையும் அமைத்தன. இங்கு குறு நிலங்கள் அவைகளின் மேலான்மை அதிகாரங்களை இழந்தன. ஆனாலும் சுவிஸ் மக்கள் செய்த புரட்சி காரணமாக 1803ஆம் ஆண்டைய மத்தியஸ்த சட்டம் (Act of Mediation) மூலம் நெப்போலியன் குறு நிலங்களின் அதிகாரங்களினை மீண்டும் அவைகளுக்கு வழங்க வந்தான். சுவிஸ் மீண்டும் கூட்டாட்சியாகியதோடு குறு நிலங்கள் கூடுதல் அதிகாரங்களை அனுபவிக்கவந்தன. இதன் போது மேலும் ஆறு குறு நிலங்கள் இணைந்து கொண்டன.

எவ்வாறாயினும் நெப்போலியன் 1815இல் போரில் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து வியன்னாவில் கூட்டப்பட்ட மாநாடானது சுவிட்சர்லாந்துக்கு ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்தது (இதன்போது மேலும் 3 குறு நிலங்களும் சுவிஸ் கூட்டமைப்பில் இணைந்து கொண்டன). இந்த அரசியமைப்பில் மத்தியில் பலவீனமான கூட்டமைப்பு அரசாங்கம் அமைக்கப்பட்டது. குறுநிலங்கள் கூடிக்குறைந்த அதிகாரங்களை அனுபவித்தன. இந்த தளர்ச்சியான கூட்டமைப்பு சுவிஸ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தத் தவறிவிட்டதால் 1847இல் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தவர் களுக்குமிடையே ஓர் உள்நாட்டுப் போரையே உருவாக்கி விட்டது (ஏழு கத்தோலிக்க பெரும்பான்மை குறுநிலங்கள் தங்களது சமய உரிமைகளைப் பாதுகாக்க கூட்டமைத்து போர் தொடுத்தன). ஆனாலும் 10 நாட்கள் நடைபெற்ற இவ் உள்நாட்டுப் போரானது சுவிஸின் மற்றைய குறுநிலங்களை ஆத்திரமூட்டியதால் அந்தப் போரில் அவை வெற்றி பெற்றதோடு சுவிஸ் மக்கள் பலமிக்க, அதிகாரமிக்க மத்திய அரசின் தேவையையும் உணர்ந்தனர்.

இதனால் 1848இல் அப்போதைய பாராளுமன்றமான Diet இன் ஒரு குழுனால் அரசியலமைப்பு வரையப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டபோது அது 15 முழு குறுநிலங்களினாலும் (Full Cantons) ஒரு அரை குறுநிலத்தினாலும் (Half Cantons) அங்கீகரிக்கப்பட்டது. இந்த அரசியலமைப்பின் கீழ் உண்மையான கூட்டாச்சி சுவிட்சர்லாந்தில் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனாலும் மத்திய அரசாங்கத்துக்கு பல்வேறு அவசரத் தேவைகளின் போது செயற்படுத்தக் கூடிய போதுமான அதிகாங்களை அது வழங்கியிருக்க வில்லை. இதனால் 1874இல் செய்யப்பட்ட முழுமையான திருத்தத்தின் மூலம் மத்திய அரசாங்கத்துக்கு போதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டது.[04] இவ்வரசியல் திட்டம் இன்றுவரை மக்களின் தேவைகளுக்கேற்ப சுமார் 60 திருத்தங்களை உள்வாங்கி வளர்ச்சி பெற்று நிலைத்திருக்கிறது.

## சுவிட்சர்லாந்து அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள் / பண்புகள் :

சுவிட்சர்லாந்தின் அரசியமைப்பினை எடுத்து நோக்கின் அது பின்வரும் பண்புகளை கொண்டிருப்பதனை அவதானிக்கலாம்.

### 1. எழுதப்பட்ட அரசியலமைப்பு :

சமஷ்டி அரசியமைப்புக்கள் போலவே சுவிஸ் அரசியல் அமைப்பும் எழுதப்பட்டுள்ளது. தற்போது 196 சரத்துக்களைக் கொண்டுள்ளது. அமெரிக்க அரசியலமைப்பை விட இரண்டு மடங்கு பெரியது. ஆனால் இந்திய அரசியலமைப்பு போல் விரிவாக எழுதப்படவில்லை.

### 2. குடியரசு அரசியல் திட்டம் :

அரசியல் திட்டமானது சுவிட்சர்லாந்தை ஒரு குடியரசாக அடையாளப்படுத்துகிறது. குடியரசின் தலைமைப் பொறுப்பு ஏழு பேர் கொண்ட பெடரல் கவுன்ஸில் (Federal Council) ஆல் நிர்வகிக்கப்படுகிறது. ஏழு பேரிலிருந்தும் குடியரசின் தலைவரும் துணைத் தலைவரும் வருடா வருடம் சுழற்சியாகத் தெரிவு செய்யப்படுவர். உண்மையில் சுவிட்சர்லாந்தானது அதன் வரலாற்றில் ஒரு போதும் மன்னராட்சியை கொண்டிருக்கவுமில்லை. அம்மக்கள் முடியாட்சியை விரும்பவுமில்லை. எப்போதும் முடியாட்சியை எதிர்த்தே வந்துள்ளனர்.

### 3. ஒரு சமஷ்டி அல்லது கூட்டாட்சி அரசியலமைப்பு :

இது ஒரு கூட்டாட்சி அல்லது சமஷ்டி அரசியலமைப்பாக உள்ளது. 20 முழு குறு நிலங்களையும் (Full Cantons) ஆறு (06) அரை குறு நிலங்களையும் (Half Cantons) கொண்ட ஒரு கூட்டமைப்பு. குறு நிலங்களுக்கான இறைமை வரையறுக்கப்பட்டது. எனினும் மீதமுள்ள அதிகாரங்கள் குறுநிலங்களுக்கே

செல்கின்றன. இதனால் மத்திய அரசாங்கம் பலமுள்ளதாக அமையவில்லை. அமெரிக்காவைப் போலவே குறுநிலங்களும் தனிப்பட்ட அரசியலமைப்புக்களை வைத்திருக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 4. நெகிழா அரசியலமைப்பு :

இவ்வரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவருவது கடினமானதும் சற்று வித்தியாசமானதாகவும் உள்ளது. திருத்தங்கள் சாதாரண மசோதாக்கள் போல் சமஷ்டி பாராளுமன்றத்தில் இரு அவைகளிலும் பிரேரிக்கப்படலாம். அவ்வாறே குறைந்தது ஒரு இலெட்சம் (100,000) வாக்காளர்கள் விரும்பியும் யாப்புத் திருத்தத்தை ஆரம்பிக்கலாம். ஆனால் யாப்புத் திருத்தம் பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்படுவதோடு மக்கள் தீர்ப்பின்போது அதிக குறுநிலங்களினாலும் அதிக வாக்காளர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

### 5. பன்மை நிர்வாகம் :

சுவிஸ் அரசியலமைப்பின் முக்கியமான ஓர் அம்சமாக அதன் பண்மை நிர்வாகத்தை அடையாளப்படுத்தலாம். நிர்வாக அதிகாரம் 7 பேர் கொண்ட பெடரல் கவுன்ஸிலால் பயன்படுத்தப்படுகிறது. இது அந்நாட்டின் நிர்வாகத்துக்கான அல்லது ஜனாதிபதிக்கான கொள்ளளவை கூட்டாகக் கொண்டுள்ளது. கவுன்ஸலரில் ஒருவரை தலைவராக (ஜனாதிபதியாக) காண வந்தபோதிலும் அவர் முக்கியமானவராக கருதப்படாது சமமானவர்களுள் ஒருவராகவே கருதப்படுகிறார். அவ்வாறே ஜனாதிபதித்துவ முறையையும் மந்திரி சபை முறையையும் கலந்ததாக இந்த பெடரல் கவுன்ஸிலின் தன்மை காணப்படுகிறது. இவர்கள் சமஷ்டி பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படுகிறார்கள். ஆனால் எந்தவித தடையுமின்றி தமது பதவிக்காலம் முடியும்வரை பதவி வகிக்கிறார்கள். இவர்கள் பாரளுமன்ற விவாதங்களில் கலந்து கொள்கிறார்கள்.

ஆனால் வாக்களிப்பதில்லை. தவிர கவுண்ஸில் பாராளுமன்றத்தைக் கலைக்கவும் முடியாது.

### 6. பாராளுமன்றம் :

சுவிட்சர்லாந்தின் பாராளுமன்றமானது தேசிய அவை, மானிலங்கள் அவை என இரு அவைகளைக் கொண்டுள்ளது. அமெரிக்காவைப் போல் மானில அவையில் ஒவ்வொரு மானிலத்திற்கும் அல்லது குறுநிலத்திற்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

### 7. நீதித்துறை :

Federal Tribunal எனும் ஒரே ஒரு உச்ச நீதிமன்றம் உள்ளது. இது இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளவைகளை விட வேறானது. நீதிபதிகள் சமஷ்டி பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்படுகிறார்கள். வருடா வருடம் பாராளுமன்றத்திற்கு அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்கவும் வேண்டும். பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு எதிரான நீதிப் புலனாய்வு அதிகாரம் இதற்கு இல்லை. எனினும் மானிலச் சட்டங்கள் மத்திய சட்டத்திற்கு எதிரானதாயின் அது பற்றிய நீதிப் புலனாய்வு அதிகாரம் பெற்றுள்ளது.

### 8. நேரடி ஜனநாயக ஏற்பாடுகள் :

சுவிட்சர்லாந்து அரசியலமைப்பிலுள்ள முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றே அதன் பிரபல்யமான நேரடி ஜனநாயக ஏற்பாடுகளாகும். மக்கள் தீர்ப்பு அல்லது ஒப்பம் கோடல், தொடக்க உரிமை ஆகிய ஜனநாயக ஏற்பாடுகள் மூலம் பொதுமக்கள் அதிக அரசியல் உரிமைகளை அனுபவிப்பதோடு அரசியல் செயற்பாடுகளிலும் நேரடியாக அதிகம் பங்கெடுக்க வருகின்றனர். அவ்வாறே அங்கு 26 சட்டமியற்றும்

தாபனங்களும், சுமார் 3000 உள்ளூராட்சி அமைப்புக்களும் உள்ளன. சிறிய நாடாயினும் அதிகாரம் பரவலாக்கப்பட்டு ஜனநாயக மயப்படுத்தப்பட்டுள்ளது.

## 9. உரிமைகள் மனு இல்லாமை :

சுவிஸ் அரசியலமைப்பின் ஒரு முக்கிய பண்பு அது நேரடியாக அல்லது தனியாக உரிமைகள் மனுவை கொண்டிருக்காமை ஆகும். ஆனால் சுவிஸ் மக்கள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பெற்றிருக்கவில்லை என்று பொருள் அல்ல. மனித உரிமைகள் பற்றிய விதிகள் யாப்பின் முழு இடங்களிலும் பரவிக்கிடக்கின்றது. மற்றய சுதந்திர ஜனநாயக நாடுகளில் மக்கள் அனுபவிக்கும் அனைத்து வித உரிமைகளும் யாப்பு ரீதியாக இம்மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## 10. மரபுகளின் செல்வாக்கு :

யாப்பு ரீதியாக பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் அதன் செயற்பாட்டில் மரபுகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துவது சுவிட்சர்லாந்து அரசியலமைப்பில் முக்கிய ஓர் அம்சமாகும். உதாரணமாக ஜனாதிபதி, உப ஜனாதிபதி தெரிவு முறை மற்றும் பெடரல் கவுன்ஸலர்கள் தெரிவு செய்யப்படுவதில் பின்பற்றுப்படும் வழிமுறைகள் அங்கு மரபுகள் வகிக்கும் செல்வாக்கை சுட்டிக்காட்டுகின்றன. (பின்னால் ஆராயப்படுகிறது).

# சட்டத்துறை (The Legislature)

சுவிட்சர்லாந்தின் சட்டத்துறை / சட்டமன்றம் 'பெடரல் அசம்பிளி' (Federal Assembly) என அழைக்கப்படுகிறது. கூட்டாட்சிச் சட்டமன்றமாகிய இது தேசிய அவை (The National Council), மானிலங்களின் அவை (The Council of States) என இரு அவைகளைக் கொண்டது. மானிலங்களின் அவை மேலவையாக இருந்து மானிலங்களை அல்லது குறுநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த, தேசிய அவை முழுக் கூட்டாட்சி மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கீழவையாக செயற்படுகிறது. மானிலங்கள் அவையில் 46 பிரதிநிதிகளும், தேசிய அவையில் 200 பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர். ஒவ்வொரு குறுநிலங்களுக்கும் மானில அவையில் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஒருவர் ஒரே நேரத்தில் இரு அவைகளிலும் அங்கம் வகிக்க முடியாது. தவிர இதில் அங்கம் வகிப்பவர்கள் மத்திய அரசிலோ அல்லது மானிலங்களிலோ எந்தப் பதவியையும் வகிக்க முடியாது. ஆனாலும் இவர்கள் தொழில் ரீதியான முழு நேர அங்கத்தவர்களாக அன்றி பகுதி நேர அடிப்படையிலேயே தமது கடமைகளை மேற்கொள்ளவருகின்றனர். இரு அவைகளுக்கும் சமமான அதிகாரங்களே வழங்கப்படடுள்ளன. ஆனாலும் பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளதுபோல் நிர்வாகத்துறையை அதன் காலம் முடிய முன்பு கலைக்க சுவிஸ் பாராளுமன்றத்திற்கு அதிகாரமில்லை என்பது நோக்கத்தக்கது.

## மானிலங்கள் அவை - The Council of States

மானிலங்களை (குறுநிலங்களை) பிரதிநிதித்துவப்படுத்தும் சபையாகிய இம்மேல் சபைக்கு மானிலங்களின் சனத்தொகை அளவுக்கு புறம்பாக சமமான இரு பிரதிநிதிகளை ஒவ்வொரு முழு மானிலமும் அனுப்புகிறது. அவ்வாறே ஒவ்வொரு அரை மானிலமும் ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்புகிறது. இதனால் 20 முழு

மானிலங்களிலிருந்தும் 6 அரை மானிலங்களிலிருந்தும் என 46 பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர். இது ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ளதுபோல் உள்ளது.[05]

இவ்வொரு மானில பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கான தேர்தல் மானில சட்டங்களைப் பொறுத்து அமைகிறது. இதனால் சில மானிலங்களில் மக்களால் நேரடியாகவும் சில மானிலங்களில் மானில சட்டமன்றம் ஊடாகவும் இவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். அவ்வாறே கூட்டாட்சி அரசியலமைப்பு இவர்களின் பதவிக் காலத்தை நிச்சயித்துக் கூறாததால் இவர்களின் பதவிக்காலம் கூட மானிலங்களினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.[06] இதனால் இவர்களின் பதவிக்காலம் ஒரு வருடம் முதல் நான்கு வருடம்வரை என வேறுபட்டுக் காணப்படுகின்றது. மானிலங்கள் அவை மானிலங்களின் நலனைப் பிரதிநிதித்துவப் படுத்தினாலும் அரசியலமைப்பின் 161 ஆவது சரத்து மானிலங்களின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பிரதிநிதிகள் வாக்களிப்பதை அதிகார பூர்வமாக தடுக்கிறது.[07] ஆகையால் பிரதிநிதிகள் பொதுவாக அவர்களின் தனிப்பட்ட முடிவின்படியே வாக்களிக்கின்றனர்.

மானிலங்கள் அவை அதற்கான தலைவர், உப-தலைவர் என்போரை ஒவ்வொரு வருடமும் தெரிவு செய்கிறது.[08] ஒருவர் தொடர்ந்து இரு தடவை ஒரே பதவிக்கு தெரிவு செய்யப்பட முடியாது என்பதும் அவ்வாறே ஒரே மானிலத்தை சேர்ந்தவர்களோ அல்லது இரத்த உறவு கொண்டவர்களோ ஒரே தடவையில் இரு பதவிகளையும் வகிக்க முடியாது என்பதும் நோக்கத்தக்கது. தலைவரானவர் அவையின் செயற்பாடுகளுக்கு தலைமை தாங்கினாலும் சாதாரண உறுப்பினர்களை விட மேலான அதிகாரங்களை (அமெரிக்க, பிரித்தானியாவில் இருப்பது போன்று) பெற்றிருக்கவில்லை. அவர் கௌரவத்தையும் மதிப்பையுமே பெற்றிருக்கிறார் (ஆனால் ஒரு முடிவுக்கு சமமான வாக்குகள் வரும்போது தீர்மானிக்கும் வாக்கினை அளிக்க முடியும்).

சுவிட்சர்லாந்தில் உள்ள மொழி வேறுபாடுகளை அரசியலமைப்பு அங்கீகரித்திருப்பதனால் இச்சபையில் ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய மூன்று மொழிகளில் எதிலும் பேசவும் தகவல்களை வெளியிடவும் அரசியல் அமைப்பு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (தேசிய அவையிலும் இந்நிலையே உள்ளது).

## அதிகாரம் / நிலை :

எல்லா நிலைகளிலும் தேசிய அவைக்குச் சமமான அதிகாரங்களை மானில அவையும் பெற்றிருக்கிறது. ஒரு மசோதா ஒரே வழிமுறை ஊடாக இரு அவைகளிலும் அங்கிகரிக்கப்பட வேண்டும். பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளது போல் நிதி மசோதாவின் மீது கூடிய அதிகாரத்தை எந்த அவையும் பெற்றிருக்கவில்லை. வரவுசெலவுத் திட்டத்தை இரு அவைகளும் மாறிமாறி வரும் வருடங்களில் சமர்ப்பிக்கின்றன. அதாவது ஒரு வருடம் தேசிய அவை சமர்ப்பித்தால் மறு வருடம் மானிலங்கள் அவை சமர்ப்பிக்கிறது.[09]

ஒரு மசோதா சம்மந்தமாக இரு அவைகளும் முரண்படும் போது இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் அதற்கு தீர்வுகான முயற்சிக்கப்படுகிறது. அங்கும் தோல்வி ஏற்படும் எனில் அம்மசோதா அழிக்கப்பட்டதாக (இல்லாமல் செய்யப்பட்டதாக) கொள்ளப்படுகிறது.

எனவே தேசிய அவைக்குச் சமமான அதிகாரங்களினை மானிலங்கள் அவை பெற்ற நிலையில் காணப்படுவதானது மானிலங்களின் சட்டத்துறை சார்ந்த அதிகாரங்கள் சிறப்பாக பிரயோகிக்கப்படுவதற்குக் காலாக அமைகிறது.

இது கீழவையாகவும் முழு சுவிட்சர்லாந்து மக்களையும் பிரதிநித்துவப் படுத்தும் சபையாகவும் உள்ளது. சமஷ்டி அரசியல் அமைப்பினால் இதன் ஒழுங்கமைப்பு, கொள்ளளவு (composition) என்பன தீர்மானிக்கப்படுகிறது. இதற்கான தேர்தல் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் விகிதாசாரத் தேர்தல் முறை மூலம் (பட்டியல் முறை) நடந்தேறுகிறது. இங்கு ஒவ்வொரு மானிலமும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியாக கணிக்கப்படுகிறது. 18 வயதை அடைந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தேர்தலில் வாக்களிக்கவும் வேட்பாளராக போட்டியிடவும் தகுதி பெற்றிருக்கிறார்கள் (1991இல் செய்யப்பட்ட யாப்புத் திருத்தத்தின் மூலம் வயது 20இலிருந்து 18ஆகக் குறைக்கப்பட்டது). ஒவ்வொரு நான்காவது வருடமும் ஒக்டோபர் மாதம் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமை இச்சபைக்கான தேர்தல் நடந்தேறுகிறது. தற்பொது இதில் 200 அங்கத்தவர்கள் உள்ளனர். சுமார் 30,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்றவகையில் தற்போது பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரதிநிதித்துவம் மானிலங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு மானிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். ஆனாலும் குறைந்தது ஒரு பிரதிநிதியையாவது அனுப்ப எல்லா மானிலங்களும் அதிகாரம் பெற்றுள்ளன.[10] (Eg:Berne – 31, Zurich 28, Uri - 01).

நான்கு ஆண்டுகள் பதவிக்காலத்தை கொண்ட இச்சபை அதன் சொந்த தீர்மானத்தால் அன்றி அல்லது சுவிஸ் மக்கள் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தால் அன்றி அதன் ஆயுட்காலம் முடிய முன்பு அது கலையமாட்டாது, கலைக்கப்படவும் முடியாது என்பது நோக்கத்தக்கது. மானிலங்கள் அவையில் உள்ளது போலவே ஒவ்வொரு வருடமும் இதன் தலைவர்[11], உப-தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவதோடு அவர்கள் தொடர்ந்து இரு ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட

முடியாதென்பதும் அவர்கள் இருவரும் ஒரே மானிலத்தை சேர்ந்தவர்களாகவோ இரத்த உறவு முறையினராகவோ இருக்கக் கூடாதென்பதும் நோக்கத்தக்கது. இங்கும் மூன்று தேசிய மொழிகளும் அலுவலக மொழியாக இருப்பதுடன் மானில அவைகளுக்குச் சமமான அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

## எதிர்க்கட்சிகளில்லா ஜனநாயக செயற்பாடுகள் :

சுவிட்சர்லாந்தில் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் முக்கியத்துவம் அற்றதாக காணப்படுகின்றமை முக்கியமான அம்சமாகும். பெரும்பான்மைக் கட்சி என்ற ஒன்று சுவிஸ் சட்டமன்றத்தில் இல்லை. இதனால் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வரிசை முறைகளும் இல்லை. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சட்டமன்றத்தின் அங்கத்தினர்களாக இல்லாதபோதும் அவர்கள் சட்டமன்ற விவாதங்களிலும் கலந்துரையாடல்களிலும் பங்கு பெறுகின்றனர். ஆனால் அவர்கள் எந்தவகையிலும் பெரும்பான்மை கட்சி என்றவகையில் பங்கு பெறுவதில்லை. அவர்கள் 3 அல்லது 4 கட்சிகளை சேர்ந்தவர்களாக அல்லது அதன் தலைவர்களாக இருப்பர். இங்கு அமைச்சர்கள் கட்சி என்ற ஒன்று இல்லாததன் காரணமாக எதிர்கட்சிக்கான கேள்வி எழும்பவுமில்லை. சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் கட்சி ரீதியாக அன்றி அயலவர்கள் என்ற வகையிலேயே அமருகின்றனர்.

சுவிஸ் மக்களும் எந்தவித பலமான அரசியல் வேறுபாட்டையும் வெளிப்படுத்துவதில்லை. அவர்கள் ஒவ்வொரு சட்டத்துறை செயற்பாட்டையும் அதன் பயன்பாட்டையிட்டே கவனம் செலுத்துகின்றனர். எந்த அரசியல் கோணத்திலும் அவர்கள் சிந்திப்பதில்லை. இதனால் சட்டமன்றத்தில் கட்சி வேறுபாடுகளுக்கோ அல்லது கட்சி ரீதியான செயற்பாடுகளுக்கோ அவர்கள் இடம் கொடுத்து செயற்படுவதில்லை.

சுவிட்சர்லாந்தின் அரசியல் வரலாற்றில் சட்டமன்றத்தின் இரு அவைகளுக்கிடையேயும் முற்றாக நேர்மையான, ஒருமைப்பாட்டுடனான செயற்பாடே நடந்தேறியிருக்கிறது. முட்டுக்கட்டை என்பது மிகவும் அரிதாகவே உள்ளது. உண்மையில் சுவிட்சர்லாந்து பாராளுமன்றமே உலகில் மிகவும் செயற்பாடுமிக்க பாராளுமன்றம் என்று கூறலாம். பிரதிநிதிகள் முழுநேர தொழிலாக அதனை மேற்கொள்ளாத போதும் கடமை தவறாது தொடர்ந்து விவாதங்களில் கலந்து கொள்கின்றனர். அவர்களிடையே விவாதம் என்பது அரிதானதாகவும் சாதாரணமானதாகவும் காணப்படுகிறது. உணர்ச்சிவசப்பட்ட பேச்சுக்களுக்களுக்கோ, விவாதங்களுக்கோ அங்கு இடமிருப்பதில்லை. உன்மையில் இங்கு பிரதிநிதிகளிடையே கல்வி அறிவு என்பது மிகவும் அதிகம். பெரும்பான்மையானோர் பட்டதாரிகள். அர்த்தமற்ற பேச்சுக்கள், தடைகள், பிரிவுகள் என்பதெல்லாம் இங்கில்லை. அமெரிக்காவிலோ பிரான்ஸிலோ பிரித்தானியாவிலோ உள்ளது போல் அரசியல் கட்சிகளின் பங்கும் இங்கில்லை.

## நிர்வாகத்துறை (The Executive)

சுவிட்சர்லாந்தின் நிர்வாக அதிகாரம் Bundesrat அல்லது Federal Council என அழைக்கப்படும் 7 பேர் கொண்ட ஒரு குழுவினால் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிர்வாகக் குழுவே அரசின் தலைமையகமாகவும் நிர்வாகத்தின் தலைமையகமாகவும் உள்ளது. இது பெயரளவு அதிகாரத்தையும் நிறைவேற்று அதிகாரத்தையும் செயற்படுத்துகிறது. இதனால் அமெரிக்காவில் ஜனாதிபதித்துவ அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது போன்றோ அல்லது பிரித்தானியாவில் அல்லது இந்தியாவில் பாராளுமன்ற சார்பு அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது போன்றோ, சுவிஸ் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை என்பது புலப்படுகிறது.

இந்த நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சட்டமன்றத்தின் அதாவது பெடரல் அசம்பளியின் இரு அவைகளதும் இணைப்புக் கூட்டத்தின்

போது தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். (ஆரம்பத்தில் மூன்று ஆண்டுகள்). ஒரு குறுநிலத்திலிருந்து (மானிலத்திலிருந்து) ஒன்றுக்கு மேற்பட்ட கவுன்ஸலர்கள் தெரிவு செய்யப்பட முடியாது என்பதும் இரத்த உறவுகளாலும் திருமண உறவுகளாலும் தொடர்புபட்ட உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் இதில் அங்கம்பெற முடியாது என்பதும் நோக்கத்தக்கது.

கவுன்ஸலர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பிறகு எந்த மன்றத்தின் அங்கத்துவத்தையோ அல்லது பொதுத் தொழிலையோ அவர்கள் வகிக்க முடியாது. யாப்பு விதிகளின் படி இவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறே எந்த சுவிஸ் பிரஜையும் இக்கவுன்ஸிலுக்கு தெரிவு செய்யப்படலாம் என்றிருந்தாலும் நீண்ட காலமாக கட்டி எழுப்பப்பட்டுவந்த மரபின் அடிப்படையில் கூட்டாட்சி சட்ட மன்றத்திலிருந்தே இவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். ஆனால் அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவுடன் அவர்கள் தங்களின் உறுப்புரிமையை துறக்க வேண்டும்.

இந்த நிர்வாக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 ஆண்டுகள் தான் என்றிருந்தாலும் அவர்கள் மக்களால் விரும்பப்படும் வரை அல்லது அவர்கள் விரும்பும் வரை மீண்டும் மீண்டும் தெரிவு செய்யப்படும் மரபும் இங்கு காணப்படுகிறது. இதனால் இவர்கள் சராசரியாக 10 ஆண்டுகள் தொடர்ந்து பதவி வகிக்கும் மரபும் உள்ளது. அவ்வாறே மரபின் அடிப்படையில் Berne, Zurich, Vaud ஆகிய குறுநிலங்களில் இருந்து தலா ஒவ்வொருவர் தெரிவு செய்யப்படுவதும் அவ்வாறே ஜேர்மன் மொழி பேசுவோர் நால்வரும், பிரான்ஸ் மொழி பேசுவோர் இருவரும், இத்தாலி மொழி பேசுபவர் ஒருவரும் தெரிவு செய்யப்படுவதும் வழக்கமாகியுள்ளது. அவ்வாறே குறிப்பிட்ட மூன்று அல்லது நான்கு அரசியல் கட்சிகளில் இருந்து இவர்கள் தெரிவு செய்யப்படுவதும் மற்றொரு மரபு ஆகும்.

இவ்வாறு பல்வேறுபட்ட நிலைகளில் இருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் நிர்வாக செயற்பாட்டின் போது இவர்கள் அரசியல் ரீதியாக நடு நிலைமை வகிக்க ஆதரவு தெரிவிப்பது மிக முக்கியமான ஒரு அம்சமாகும்.

## தலைவர், உப-தலைவர் :

பெடரல் அசம்பிளி ஒவ்வொரு வருடமும் பெடரல் கவுன்ஸிலுக்கான ஒரு தலைவரையும் உப-தலைவரையும் தெரிவு செய்கிறது. ஒரே நபர் தொடந்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரே பதவிக்கு தெரிவு செய்யப்பட முடியாது. ஆனாலும் ஒவ்வொரு ஒன்றுவிட்ட வருடங்களிலும் அவர் மீண்டும் மீண்டும் அப்பதவிக்கு தெரிவு செய்யப்படலாம். வழமையாக ஒவ்வொரு வருட முடிவிலும் உப-தலைவர் தலைவராகவும் வேறு ஒரு உறுப்பினர் உப-தலைவராகவும் தெரிவு செய்யப்படுவதே நடந்தேறுகிறது. இந்த இரண்டு அலுவலக பதவிகளும் இந்த ஏழு உறுப்பினர்களுக்கிடையேயும் மாறி மாறி சென்று வரும்.[12]

பொதுவில் பெடரல் கவுன்ஸிலின் (நிர்வாகக் குழுவின்) தலைவர் சுவிஸ் கூட்டமைப்பின் ஜனாதிபதியாக அறியப்படுவதுண்டு. ஆனாலும் இந்தக் குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள் அனுபவிக்காத எந்த விஷேட சலுகைகளையும் இவர் அனுபவிப்பதில்லை. இவர் அரசின் பிரதான நிர்வாகத் தலைவராக கணிக்கப்படுவதில்லை. பிரதானமானவர்களுள் ஒருவராகவே கணிக்கப்படுகிறார். இவருக்கு வழங்கப்பட்டுள்ள உயர்ந்த நிலை "ஒழுங்கு முறையான உயர்வு" மட்டுமே. இவர் பெடரல் கவுன்ஸிலுக்கு தலைமை தாங்குவதோடு அங்கு சமமான வாக்குகள் அளிக்கப்படும் போது தீர்மானிக்கும் வாக்களிக்க அதிகாரமும் பெற்றுள்ளார். மரபு ரீதியாக இவர் திணைக்களங்களை மேற்பார்வை செய்யும் கடமையையும் செய்கிறார்.

சுவிட்சர்லாந்தின் சமஷ்டி நிருவாகச் செயற்பாடுகள் ஏழு திணைக்களங்களிடம் பிரித்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. சான்ஸலரினால் (Chancellor) இந்த திணைக்களங்களுக்கான பொறுப்புக்கள், பிரிவுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு திணைக்களமும் ஒவ்வொரு பெடரல் கவுன்ஸலரின் தலைமையின் கீழ் விடப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வருடத்திற்கே ஒரு திணைக்கள தலைவராக இருப்பார்கள். தனிப்பட்ட ரீதியில் திணைக்களங்களின் செயற்பாடுகளுக்கு குறிப்பிட்ட கவுன்ஸலரே பொறுப்பாக்கப்பட்டுள்ளார். அவ்வாறே அவர்கள் அனைவரும் நிர்வாகக் கொள்கைகளுக்கு கூட்டாக பொறுப்புக்கூற கடமைப்பட்டவர்கள். இவ் ஏழு பேரும் இங்கு அமைச்சர்களாக அறியப்படுவதும் உண்டு. ஏழு திணைக்களங்களும் வருமாறு: வெளிநாட்டு அலுவல்கள் (Foreign Affairs), உள்நாட்டு அலுவல்கள் (Home Affairs), நீதியும் பொலிஸும் (Justice and Police), சிவில் பாதுகாப்பு மற்றும் விளையாட்டு (Civil Protect and Sport), நிதி (Finance), பொருளாதார விவகாரங்கள் (Economic Affairs), சுற்றாடல், போக்கு வரத்து, சக்தி / வலு மற்றும் தொடர்பாடல் (Environment, Transport, Energy and Communication) என்பனவாகும்[13]

அரசியலமைப்பின் பிரகாரம் இந்த திணைக்களங்கள் அரசாங்க வேலைகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் செயற்படும் அதேவேளை எல்லா நிர்வாக முடிவுகளும் பெடரல் கவுன்ஸிலிலிருந்து அதன் மொத்த வடிவமாக வெளிவர வேண்டும். இக்கவுன்ஸிலானது முக்கியமான கொள்கை விடயத்தில் உரிய காலத்தில் சந்தித்துக் கொள்வதோடு கூட்டாக சட்டத்துறைக்கும் ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்கிறது. அறிஞர் டைசி (Deicy) என்பவர் இக்கவுன்ஸிலின் செயற்பாட்டினை கூட்டுப்பங்கு நிறுவனத்தின் (Joint Stock Company) இயக்குனர் குழுவிற்கு ஒப்பிடுவதாக சி. எப் ஸ்ராங்க் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.[14]

**நிர்வாக அதிகாரங்கள் :**

பெடரல் கவுன்ஸிலின் நிர்வாக அதிகாரங்கள் சட்டத்தை அமுலாக்கல், வெளிவிவகாரங்களை கையாளுதல், வரவு செலவுத்திட்டத்தை தயாரித்தல் உத்தியோகத்தர்களை, படைக்கட்டுப்பாட்டாளர்களை நியமித்தல் என்பனவற்றுடன் தொடர்புபடுகிறது; எல்லா நிர்வாகத் தீர்மானங்களும் பெடரல் கவுன்ஸிலின் பெயரின் கீழேயே எடுக்கப்படுகின்றன. அரசியலமைப்பின் பாதுகாவலனாக கவுன்ஸில் செயற்படுவதோடு சமஷ்டி குறுநிலங்களின் அரசியலமைப்புக்களையும் உத்தரவாதப்படுத்துகின்றது.

**சட்டத்துறை அதிகாரங்கள் :**

மசோதாக்களை தயாரித்தல், அவற்றை அறிமுகம் செய்தல், விவாதங்களில் பங்கெடுத்தல் என்பனவற்றோடு வருடா வருடம் நிர்வாக செயற்பாடுகளின் அறிக்கையை சமர்ப்பித்தல், வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தை தேசிய அசம்பிளியில் அங்கீகரிக்கச் செய்தல் என்பனவற்றுடன் தொடர்புபடுகிறது.

ஆனாலும் இக்கவுன்ஸிலானது சட்டத்துறையை கலைக்கும் அதிகாரத்தை பெற்றிருக்கவில்லை என்பதும் சட்டமன்றம் தீர்மானம் எடுத்தால் மட்டுமே அது கலையும் என்பதும் நோக்கத்தக்கது.

**சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்குமிடையே உள்ள உறவு :**

சுவிட்சர்லாந்தில் சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்குமுள்ள உறவு வித்தியாசமானதும் இணையற்றதுமாகும். நிர்வாகத்துறையினரான கவுன்ஸிலர்கள் சட்டத்துறையால் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்களின் பதவிக்காலம் முடிவதற்கு முன் அவர்களை சட்டத்துறையால் நீக்க முடியாது. இதனால் சுவிஸ் நிர்வாகத்தின் தனிச்சிறப்பு அதன் உறுதி நிலையாகும் எனலாம். கவுன்ஸலர்கள் பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் சென்று விவாதங்களில்

பங்குபற்ற முடியும் என்றாலும் அவர்கள் வாக்களிக்க முடியாது. தவிர இவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுமில்லை. ஒரு கவுன்ஸலரினால் முன்வைக்கப்பட்ட மசோதா தோற்கடிக்கப்பட்டாலும் அவர் பதவி விலக வேண்டியதில்லை. ஆனாலும் கவுன்ஸிலர்களே அதிகமான மசோதக்களை சமர்ப்பிக்கிறார்கள். தனிப்பட்ட உறுப்பினர்கள் ஆரம்பிப்பதாக இருந்தாலும் கவுன்ஸிலர்களின் கருத்துக்கு அனுப்புகிறார்கள்.

இவ்வாறு சுவிட்சர்லாந்தின் நிர்வாகத்துறையை நோக்கின் அது பாராளுமன்ற சார்பு நிர்வாகத்துறை போலோ அல்லது ஜனாதிபதி சார்பு நிர்வாகத்துறை போலோ இல்லாது இரண்டும் கலந்த ஒரு விசித்திரமான. மனதைக்கவரும் நிர்வாக முறையாக இருப்பதனை அவதானிக்கலாம்.

## நீதித்துறை (The Judiciary)

சமஷ்டியின் அல்லது கூட்டாச்சின் மிக முக்கியமான பண்புகளில் ஒன்று நீதித்துறையின் மேலான தன்மை ஆகும் (Authority of the Judiciary). ஆனாலும் சுவிஸ் கூட்டாட்சி முறையில் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளது போன்று நீதித்துறை ஒரு முக்கிய இடத்தினைப் பெறவில்லை. 1874இற்கு முன்பு இவ்வாறான சமஷ்டி நீதிமன்றம் என்ற ஓர் அமைப்பு கூட சுவிட்சர்லாந்தில் இருக்கவில்லை. 1874ஆம் ஆண்டைய அரசியலமைப்பானது பெடரல் ரிபியுனல் (Federal Tribunal) எனும் சமஷ்டி நீதிமன்றத்தை Vaud மானிலத்தின் தலைநகர் லூசான் (Lausanne) இல் நிறுவுவதற்கு அனுமதி அளித்தது. சட்டத்துறையினதும் நிர்வாகத் துறையினதும் அமைவிடம் Berne ஆக இருந்த போதும் புவியியல் ரீதியாகவும் நீதித்துறையின் சுதந்திரத்தை எடுத்துக்காட்டுவதற்காக Laussanne தெரிவு செய்யப்பட்டது என்பது நோக்கத்தக்கது. தவிர மொழி ரீதியாக பிரான்ஸ் மொழி பேசுவோரும் நாட்டின் ஒரு பகுதியினர்

என்பதை எடுத்துக்காட்டவும் பிரான்ஸ் மொழி பேசுவோர் அதிகமாகவுள்ள இம்மானிலம் தெரிவு செய்யப்படிருக்கிறது. (Berne ஜேர்மன் மொழி பேசுவோர் அதிகமுள்ள மானிலம்).

இந்த பெடரல் ரியியுனல் மட்டுமே சுவிஸ் கூட்டமைப்பின் ஒரே ஒரு தேசிய உயர் நீதி மன்றமாகும். அமெரிக்காவில் உள்ளது போன்று எந்த கீழான சமஷ்டி நீதி மன்றமும் இங்கில்லை. எல்லா மானிலங்களுக்கும் ஒரு மேன்முறையீட்டு நீதிமன்றமாகவும் இது அமைந்துள்ளது.

இதன் நீதிபதிகளின் எண்ணிக்கை, அமைப்பு பற்றி அரசியல் அமைப்பு எதுவும் கூறாது சமஷ்டி சட்டத்தின் முடிவுக்கு விட்டுவிட்டது. ஆதலால் அதன் எண்ணிக்கை காலத்துக்கு காலம் அதிகரித்து வருவதுண்டு. தற்போது 30 முழு நேர நீதிபதிகளையும், 30 சுழற்சி முறை அல்லது பதில் நீதிபதிகளையும் (Alternates or Substitute Judges) கொண்டுள்ளது.[15] இவர்கள் சமஷ்டி பாராளுமன்றத்தின் இரு அவைகளினதும் இணைப்புக் கூட்டத்தில் ஆறு ஆண்டுகால பதவிக்காக தெரிவு செய்யப்படுகின்றார்கள். இவர்களில் தலைவர், உப-தலைவரும் தெரிவு செய்யப்படுகினர். இவர்களின் தெரிவு விடயத்திலும் சட்டமன்றத்திலும் நிர்வாகக் குழுவிலும் பின்பற்றப்படும் நடைமுறைகள் பின்பற்றப்படுவது நோக்கத்தக்கது.

இந்நீதிமன்றத்திற்கு சிவில், குற்றவியல், நிர்வாக சம்மந்தமான நீதித்துறை அதிகாரங்கள் உண்டு. தவிர நேரடியான விசாரனைகளை செய்வதுடன் மறு விசாரனைகளையும் அல்லது மேல் விசாரனைகளையும் மேற்கொள்ள முடியும் என்பதும் மானிலங்களுக்கிடையே நிகழும் பிணக்குகளை தீர்த்துவைக்க இதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் நோக்கத்தக்கது. ஆனாலும் அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது நீதிப்புலனாய்வு விடயத்தில் மிகவும் குறைந்தளவு அதிகாரத்தையே பெற்றுள்ளது. (இது சமஷ்டி பாராளுமன்ற சட்டத்தை செல்லுபடியற்றதாக்க முடியாது. அவ்வாறே

மானில சட்டங்களை ஒரு வருடத்திற்கே தடுத்து வைக்கலாம்). தவிர, அரசியலமைப்புக்கு உரைவிளக்கம் கூறும் அதிகாரம் இதற்கில்லை. அது சட்டமன்றத்திற்கே தெளிவாக அளிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் சட்டம் சம்மந்தமான அதிருப்தியை பொதுமக்கள் நேரடியாகவே பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் தடையின்றி இலகுவாக தெரிவித்துவிட முடியும் என்ற மாபெரும் நீதி அதிகாரம் மக்களிடம் வழங்கப்பட்டுள்ளதால் யாப்பை வரைந்தவர்கள் உயர் நீதிமன்றத்திற்கு அவ்வதிகாரத்தை கொடுக்காமலிருந்திருக்கலாம்.

## சுவிட்சர்லாந்து கூட்டாட்சியில் அதிகாரப் பிரிப்பும் மத்திய மானில உறவுகளும் :

சமஷ்டியில் மத்திய அரசுக்கும் மானில அரசுகளுக்குமிடையே அதிகாரங்கள் அரசியலமைப்பூடாக பிரிக்கப்படுவது மிக முக்கியமான ஒரு பண்பாக உள்ளது. அந்தவகையில் சுவிட்சர்லாந்து அரசியலமைப்பானது அமெரிக்க யாப்பினைப் பின்பற்றி அதிகாரப் பிரிப்பினை மேற்கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் உள்ளதுபோல் சுவிட்சர்லாந்திலும் மீதமான அதிகாரங்கள் (Residuary Power) மானில அலகுகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. கனடா, இந்தியா போன்ற சமஷ்டிகளில் இவ்வதிகாரமானது மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. அந்தவகையில் மத்திய அரசின் கீழ் வெளி விவகாரம், தொடர்பாடல், நாணயம், வர்த்தகம், அச்சுரிமை, ஆயுதக் கட்டுப்பாடு கைத்தொழில் சட்டமியற்றல், பொது சுகாதாரம், வெடி மருந்து மற்றும் மதுபானம் சம்மந்தமான தனியுரிமை அதிகாரங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இரண்டு அலகுகளுக்கும் பொதுவானவைகளாக கல்வி, செய்திக்கட்டுப்பாடு, பெருந்தெருக்கள், கைத்தொழில், வங்கி என்பனவுள்ளன. ஆனாலும் இந்த விடயங்கள் தொடர்பாக இரு அரசாங்கங்களுக்கும்

இடையே முரண்பாடுகள் தோன்றுமிடத்து மத்திய அரசின் செல்வாக்கு வெற்றி பெறுகிறது. ஆனாலும் சுவிஸ் நிர்வாக செயற்பாட்டில் இரு அரசாங்கப் பிரிவுகளும் எப்பொழுதும் இனைந்த கைகளுடனேயே (With join hands) செயற்படும்வகையில் அரசியலமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது நோக்கத்தக்கது. உதாரணமாக அரசியல் அமைப்பானது மத்திய அரசுக்கு வெளிநாடுகளுடன் ஒப்பந்தம் செய்யும் அதிகாரத்தினை வழங்கியிருந்த போதும், அதே நேரம் மானில அரசுகளும் குறிப்பிட்ட சில விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் ஒப்பந்தம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது.[16]

இவற்றுக்கு மேலாக சில விடயங்கள் தவிர்த்து அனேகமாக எல்லா சமஷ்டி அதிகாரங்களும் மானில நிர்வாகிகளாலேயே பிரயோகிக்கப்படுகின்றன. இதனால் மிக சொற்பமான மத்திய அரசு அதிகாரிகளே சுவிட்சர்லாந்தில் உள்ளனர். ஒவ்வொரு மானிலமும் அரசியலமைப்பு, சட்டத்துறை, நிர்வாகத்துறை, போன்றவற்றை தனித்தனியே வைத்திருக்கவும் உரிமை பெற்றுள்ளன.

சுவிஸ் கூட்டமைப்பின் மற்றுமொரு முக்கிய அம்சம் அதன் பாதுகாப்பு முறைமை பரவலாக்கப்பட்டிருப்பதாகும். அரசியலமைப்பானது பாதுகாப்பு மற்றும் இராணுவ முறைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கியுள்ளபோதிலும் சமாதான சூழலில் நிரந்தர படையை வைத்திருக்க அனுமதியளிக்கவில்லை. சாதாரண நேரத்தில் 20இற்கும் 42 இற்கும் இடைப்பட்ட வயதுடைய எல்லா பிரஜைகளுக்கும் இராணுவ சேவை கடமையாக்கப்பட்டிருந்த போதும் அவசரகால நிலையில் எல்லா ஆண்களும் செயற்படுவதற்கு அழைக்கப்படலாம் என்றிருந்தாலும் சுவிட்சர்லாந்தின் மரபு ரீதியான நடுநிலைமைத் தன்மை காரணமாக பலமான பாதுப்புப் படையை ஏற்படுத்திக்கொள்ள எந்தத்தேவையும் அதற்கு ஏற்படவில்லை, தவிர மானிலங்களுக்கு 300 பேருக்குட்பட்ட படையணியை உருவாக்கிக்

கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதும் போர்ச் சூழலில் மத்திய அரசின் இராணுவ விஸ்தரிப்புக்கு மானில அரசுகள் உதவி செய்ய வந்தபோதும் அதற்கான செலவீனத்தை மத்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்[17] என்பதும் சுவிட்சர்லாந்தில் மானில அரசுகளுக்கு பொதுமான பாதுகாப்பு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகிறது.

உண்மையில் சுவிஸ்லாந்தில் அதிகாரப் பிரிப்பில் குறைபாடு உள்ளது என்று பலர் சுட்டிக்காட்டலாம். ஆனால் சுவிஸ் மக்கள் அவற்றை குறையாக கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. இதனால் மத்திய-மானில அரசுகளுக்கு இடையிலான உறவு என்பது மிகவும் பலமானதாக அங்கு வளர்ச்சி பெற்றுள்ளதோடு அவர்களின் சமஷ்டி ஆட்சியையும் பலப்படுத்துகிறது.

## சுவிட்சர்லாந்தில் நேரடி ஜனநாயக ஏற்பாடுகள் :

வாக்காளர்களான சாதாரண பொதுமக்களுக்கு அவர்களுடைய நலனுக்காக செய்யப்படும் ஏற்பாடுகளை ஏற்கவோ மறுக்கவோ அதிகாரம் வழங்குவதன் மூலமும் அவர்கட்கு திருப்தியில்லாத மக்கள் பிரதிநிதிகளை பதவியில் இருந்து விலக்க அதிகாரம் வழங்குவதன் மூலமும் அவர்கட்கு தங்களுடைய அரசியல் தலைவிதி மீது நேரடியான கட்டுப்பாட்டதிகாரம் அளிக்கும் முகமாக அமைந்ததே நேரடி ஜனநாயக ஏற்பாடுகளாகும். ஆகவே இம்முறையானது மக்களுடன் நேரடியாக கலந்தாலோசிக்க வேண்டும் என்பதை குறிப்பில் உணர்த்துகின்றது.[18]

இந்தவகையில் சுவிட்சர்லாந்து அரசியலமைப்பை இணையற்ற ஒன்றாக ஆக்கியதில் அங்கு காணப்படும் நேரடி ஜனநாயக ஏற்பாடுகளும் பெரும்பங்கு வகிக்கின்றன. அரசியலமைப்பை திருத்துவதற்கும் முற்றாக மாற்றுவதற்கும் சட்டங்களைக் கொண்டுவருவதற்கும் அவசியமான பொது விடயங்களை அமுல்படுத்துவதற்கும் என சுவிஸ்லாந்தில் இந்த நேரடி ஜனநாயக

ஏற்பாடுகள் பெரிதும் துனை புரிகின்றன. இவை இரண்டு முறையில் இங்கு தொழிற்படுகின்றன.

1. குடியொப்ப முறை (Referendum).
2. தன்முயற்சி விண்ணப்ப முறை அல்லது தொடக்க உரிமை (Initiative Petition).

குடி ஒப்பம் (Referendum) என்பது சட்டத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் அல்லது சட்டத் திருத்தங்கள் அல்லது அரசியல் அமைப்புத் திருத்தங்கள் மீதான பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கும் ஒரு வழி முறையாகும். இது கட்டாயமானது, மற்றும் விருப்பத்திற்குரியது என 2 வகையில் உள்ளது. அரசியலமைப்பு திருத்தம் சம்மந்தப்பட்ட விடயத்தில் மக்கள் தீர்ப்பு கட்டாயமாகிறது. சட்டமன்றத்தால் கொண்டுவரப்பட்ட அல்லது மக்களால் நேரடியாக தொடக்கிவைக்கப்பட்ட எந்த அரசியலமைப்புத் திருத்தமும் மக்கள் தீர்ப்பை அடுத்தே சட்டமாகிறது. இது பெரும்பான்மை வாக்குகளாலும் பெரும்பான்மை ஆதரவு பெற்ற பெரும்பான்மை மானிலங்களினாலும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.[19]

சாதாரண சட்டங்கள் மீதான மக்கள் தீர்ப்பு விருப்பத்திற்குரியது. அதாவது இங்கு ஒரு சாதாரண சட்டம் அல்லது சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டு 90 நாட்களுக்குள் செல்லுபடியான கையொப்பத்தின் மூலம் குறைந்தது 50,000 குடிமக்கள் அல்லது எட்டு (8) மானிலங்கள் (Cantons) வேண்டிக்கொண்டால் அத்திருத்தத்தை அல்லது அச்சட்டத்தை மக்கள் தீர்ப்புக்கு விட வேண்டும். இங்கு மக்கள் அதற்கு எதிராக வாக்களிப்பின் அச்சட்டத்தை நீக்க வேண்டும் (இங்கு பொரும்பாண்மை மானிலங்களின் ஆதரவு என்பது தேவையில்லை).

தொடக்க உரிமை (Initiative) என்பது அரசியலமைப்பினைத் திருத்துவதற்கு அல்லது முற்றாக மாற்றுவதற்கு குடிமக்கள் பெற்றுள்ள சிறப்பதிகாரத்தையே இது குறிக்கிறது. குடியொப்பம் என்பது ஒரு சட்டம் தொடர்பாக அதை விரும்பாத பட்சத்தில் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதை மட்டுமே சுட்டிக்காட்டுகிறது. ஆனால் மக்கள் தாம் விரும்பும் அரசியலமைப்புத் திருத்தத்தை தாமே முன்மொழிந்து

அல்லது தாம் விரும்பாத அரசியலமைப்பை முற்றாக நீக்கி புதிய அரசியலமைப்பை முன்வைத்து அதற்கு அங்கீகாரத்தைப் பெற தொடக்க உரிமை சந்தர்ப்பமளிக்கிறது.

சுவிஸ் கூட்டமைப்பின் அரசியலமைப்பில் 139 ஆவர் சரத்து அரசியலமைப்புத் திருத்தத்தை அல்லது புதிய அரசியலமைப்பை குடி மக்களே தொடக்கிவைக்கும் அதிகாரம்பற்றிக் கூறுகிறது. இதன்படி சுவிஸ் மக்களில் ஒரு லெட்சம் பேர் 18 மாதங்களுக்குள் தமது கையொப்பத்தை திரட்டி குறித்த அரசியலமைப்புத் திருத்தத்தை அல்லது புதிய அரசியலமைப்பு மசோதாவை சட்டமன்றத்திற்கு முன் மொழியலாம். அவ்வாறு முன்மொழியப்படுவதை சட்டமன்றம் மறுக்க முடியாது. அதனை மக்கள் தீர்ப்புக்கு சமர்ப்பித்து அதனை பெரும்பான்மை மக்கள் அங்கீகரிக்கும் பட்சத்தில் திருத்தம் அல்லது புதிய அரசியலமைப்பு சட்டமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும். சில மானில அரசிலமைப்புக்கள் மானில அரசியலமைப்புத் திருத்தத்தை அல்லது புதிய அரசியலமைப்பை மட்டுமன்றி சாதாரன சட்டங்களையும் தொடக்கிவைக்க குடிமக்களுக்கு அங்கீகாரத்தை வழங்கியுள்ளன.[20]

இவ்வாறான நேரடி ஜனநாயக ஏற்பாடுகள் மூலம் சுவிஸ் மக்கள் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சாதாரண சட்டங்கள் தொடர்பில் தமது பூரண சுதந்திரத்தை பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளனர் என்பது அங்கு ஜனநாயகம் சிறப்பாக அமுல்படுத்தப்படுவதற்கு காலாக அமைகிறது என்பதை சுட்டிக்காட்டுகிறது எனலாம். இந்தவகையில் சுவிஸ் மக்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து வருடத்திற்கு 4 தடவைகள் வாக்களிக்கின்றார்கள் என்பதும் அவ்வாறே வருடாந்தம் சுமார் இரண்டு டஜன் மசோதாக்களுக்கு மேல் வாக்களிக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை :

இதுவரை கண்டுகொண்டது போலவே சுவிட்சர்லாந்து அரசியல் முறையில் விசித்தரமான ஏற்பாடுகள் அதிகமிருக்கின்றன. அவை உலக நாடுகளுக்கு முன்மாதிரிகளாகவுமுள்ளன. விசேடமாக பல்லினத் தன்மைகளோடு தேசத்தைக் கட்டியெழுப்பதல், அரசைக் கட்டியெழுப்புதல், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புதல் என்பனவற்றைச் செய்ய முடியாது முரண்பாட்டால் சிக்கித் தவிக்கும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் சுவிட்சர்லாந்து அரசியல் முறையில் இருந்து கற்றுக்கொள்ள நிறையவே இருக்கின்றன. சுவிஸ் மக்கள் அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கிக்கொண்ட வரலாறு, அதில் செய்துகொண்ட ஏற்பாடுகள், விசேடமாக கூட்டாட்சியில் அதிகாரப் பிரிப்பு, கூட்டு நிருவாகக் குழு முறை, சமமான அதிகாரங்களோடு இரு அவைகள் கொண்ட பாராளுமன்ற முறை, அரசியலமைப்பின் நெகிழாத்தன்மை போன்றன சிறந்த முன் உதாரணங்களாக உள்ளன.

இன்று உலக நாடுகளிடையே பல்வேறு கருத்து முரண்பாடுகளுக்கு வித்திட்டுள்ள கூட்டுச்சேரல் அல்லது அணிசேரல் எனும் பக்கச்சார்பான செயற்பாட்டிலிருந்து விடுபட்டு அரசியல் ரீதியாக நடுநிலமை வகித்துவந்தமை கூட சுவிட்சர்லாந்தை ஒரு தனித்துவமான நாடாக உலகில் எடுத்துக்காட்ட வழி செய்திருக்கிறது. தவிர முக்கியமான அரசியல் உயர் பதவிகளை ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே மானிலத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது இரத்த உறவினர்களோ வகிக்க முடியாது என்ற சுவிட்சர்லாந்தின் அரசியல் ஏற்பாடுகளானது பிரசேதவாதத்தையும் குடும்ப ஆதிக்கத்தையும் இல்லாமல் செய்யும் என்பதால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஏற்படும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வினை ஏற்படுத்தித் தர போதுமானதாக இருக்கலாம். கூட்டாட்சியின் நிர்வாகத்தை எல்லா இன, பிரதேச மக்களும் கொண்டுசெல்ல அவர்கள் ஏற்படுத்தியுள்ள ஏற்பாடுகளும் முன்மாதிரியானவைகளே.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு அரசியலில் கட்சி ரீதியான தீவிர செயற்பாடுகளின் விளைவுகளிலிருந்து விடுதலை பெற சுவிட்சர்லாந்தில் நிலவும் கட்சி சார்பற்ற அரசியல் - பாராளுமன்ற செயற்பாடுகளில் நல்ல முன்மாதிரிகளுள்ளன. அவ்வாறே பொதுமக்களின் அபிலாசைகளை சிறப்பாக வெளிப்படுத்த வழங்கப்பட்டுள்ள நேரடி ஜனநாயக ஏற்பாடுகளும் சிறந்த முன்மாதிரிகளே. இவற்றுக்கெல்லாம் மேலாக மிக சொற்பளவான இயற்கை வளத்தைக் கொண்டு பல்வேறு வேற்றுமையிலும் ஒற்றுமையோடு செயல்பட்டு பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமது நாட்டை உயர்த்தி தனித்துவமானதாக அடையாளப்படுத்திய சுவிஸ் மக்களின் செயற்பாடுகள் முழு உலகிற்குமே முன்மாதிரியானவைகள் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட வசனமல்ல.

## End Notes :

[1] ***Switzerland***, Microsoft Encarta, Encyclopedia, 2000.

[2] Kaely.S.L, ***World Constitution***, Sudha Publication (P) Ltd, New Delhi.1997, p.378.

[3] ஸ்ட்ராங்க்.சி.எப், ***தற்கால அரசியல் அமைப்புக்கள்***, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை, 1963, பக்.149

[4] சூர்ய நாராயனன்.பா, ***தற்கால கூட்டாட்சி நாடுகளில் மைய மானில உறவுகள்***, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை, 1972, பக்.33-34

[5] ஐக்கிய அமெரிக்காவில் செனட் சபையில் 50 மானிலங்களில் இருந்து தலா இரு பிரதிநிதிகள் வீதம் 100 பிரதிநிதிகள் உள்ளனர். அவ்வாறே அவுஸ்திரேலியாவில் செனட் சபையில் 6 மானிலங்களில் இருந்து தலா 12 பிரதிநிதிகள் வீதம் 72 பிரதிநிதிகளும் 2 பிரதேசங்களில் (Territory) இருந்து தலா 2 பிரதிநிதிகள் என 4 பிரதிநிதிகளும் என 76 உறுப்பினர்கள் உள்ளனர்.

[6] See : Article 150 of the Constitution www.oefre.unibe.ch/law.icl/sz

[7] According to the Article 161 of the constitution The Members of the Federal Parliament shall vote without instructions. See: www.oefre.unibe.ch/law.icl/sz

[8] President of the Council of States for the year 2003/2004 is Fritz Schiesser- See: www.parliament.ch/e

[9] Kaely. S.L, ***World Constitution***, op.cit, p.404.

[10] According to the Article 149(4) of the Constitution 'the seats shall be distributed among the Cantons in proportion to their population. Each Canton shall have at least one seat. See: www.oefre.unibe.ch/law.icl/sz

[11] President of the National Council for the year 2003/2004 is Max Binder See: www.parliament.ch/e